C.O.S.No.2/2023 தேதி – 03.01.2025

P.W.1 –ஹரீஸ்

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –

ஸ்ரீ மீனாட்சி டிரேடர்ஸ் என்னும் நிறுவனம் தனி உரிமையாளரைக் கொண்ட நிறுவனம் என்றால் சரிதான். நான் வழக்கு பிராதில் வாதியாக ஸ்ரீ மீனாட்சி டிரேடர்ஸ் அதன் உரிமையாளர் திரு.ஹரீஸ் மூலம் என்று காட்டியுள்ளேன் என்றால் சரிதான். தனி உரிமையாளர் நிறுவனம் மூலம் வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனத்திற்கும், 1ம் பிரதிவாதி நிறுவனத்திற்கும் மூலப்பொருட்கள் மற்றும் சாயப்பொடி கொள்முதல் செய்வதற்கு எழுத்து மூலமாக எந்த ஒப்பந்தமும் இல்லை என்றால் சரிதான். வாய்மொழியாக ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக என்னுடைய பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். 11.08.2021 முதல் 27.10.2021 வரை வியாபார பாக்கி தொகை ரூபாய் 33,18,598 தொகை தரவேண்டியதாக உள்ளது என பிராதில் கூறியுள்ளேன். பிராதில் ஒவ்வொரு இன்வாய்ஸ் மூலம் எவ்வளவு தொகைக்கு என்னென்ன சரக்குகள் அனுப்பப்பட்டது என்பது குறித்து இனம் வாரியாக தெரிவிக்கவில்லை, தற்போது நிரூபணவாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன். எதிர்வழக்குரையில் பிரதிவாதி தரப்பில் மேற்படி விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை என கட்சி செய்யப்பட்ட பிறகு நிரூபணவாக்குமூலத்தில் கூடுதல் விவரங்களை தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்களுக்காக கூடுதல் ஆவணங்களும் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்குரையில் ஸ்ரீ மீனாட்சி டிரேடர்ஸ் என்ற நிறுவனம் ஜி எஸ் டி–ல் பதிவு செய்யப்பட்ட வகைக்கு ஆவணங்களை இணைத்து சமர்பிக்கவில்லை என்றால் அப்போது சமர்பிக்கவில்லை, தற்போது சமர்பிக்கிறேன். ஸ்ரீ மீனாட்சி டிரேடர்ஸ் என்ற நிறுவனம், 1ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு சப்ளே செய்த மூலப்பொருட்கள் மற்றும் சாயப்பொடி ஆகியவற்றை யாரிடம், எப்போது வாங்கப்பட்டது என்பது குறித்து ஆவணங்களை பிராதுடன் சேர்த்து தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

மேற்படி விவரங்களையும் பிராதில் சொல்லவில்லை என்றால் அப்போது தேவைப்படவில்லை என்பதால் தெரிவிக்கவில்லை. வாதி நிறுவனம், 1ம்பிரதிவாதி நிறுவனத்திடம் பாக்கி தொகையை செலுத்துவதற்காக பலமுறை நேரிலும், இ–மெயில் மூலமாகவும் கேட்டதாக கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்களை பிராதுடன் இணைத்து தாக்கல் செய்யவில்லை, தற்போது நிரூபணபிரமாண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்கிறேன். எந்தெந்த தேதிகளில் அவ்வாறு இ–மெயில் மூலம் 1ம்பிரதிவாதியிடம் கேட்கப்பட்டது என்ற வகைக்கு பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி விவரங்களை எதிர்வழக்குரையில் 1ம் பிரதிவாதி சுட்டிக்காட்டியபிறகு வழக்கில் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்காக நிரூபணபிரமாண வாக்குமூலத்துடன் ஆவணங்களை ஜோடித்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடைய தந்தை 1ம் பிரதிவாதி நிறுவனத்தில் Chief Chemical Scientist ஆக பணிபுரிந்தார் என்றால் சரிதான். என் தந்தை 35 வருடங்களாக பணிபுரிந்தார். 1ம்பிரதிவாதி நிறுவனத்தில் என் தந்தை ரசாயண பொருட்களை கொள்முதல் செய்யும் பொறுப்பில் இருந்தார் என்றால் சரியல்ல, அவர் மட்டும் இல்லை, அவருடன் சேர்ந்து பல அலுவலர்களான வித்யா, பாடலிங்கம் ஆகியோர் இருந்தனர். என் தந்தை தான் தலைமை பொறுப்பில் இருந்தார் என்றும், அவர் தான் கொள்முதல் பற்றிய முடிவுகள் எடுத்து வந்தார் என்றால் சரியல்ல. கொள்முதல் பில்லில் பணம் அனுமதித்து பரிந்துரை செய்வது என் தந்தை மட்டும் என்றால் சரியல்ல, 2 பேர் அவ்வாறு பரிந்துரை செய்வார்கள், யார் என்று பெயர் தெரியாது. என் தந்தை என் மூலமாக தரம்குறைந்த மூலப்பொருட்களை கொள்முதல் செய்து மார்க்கெட் நிலவரத்தை விட கூடுதல் விலைக்கு பில் தயார் செய்து பணம் பெற்றுக்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. அதற்காக என் நிறுவனம் ஒரு பகடையாக பயன்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. என் தாயார் கண்மணி 1ம் பிரதிவாதி நிறுவனத்தின் நிர்வாக பொறுப்பில் இருந்த பெண்கள் கல்லூரியில் தமிழ் பேராசிரியராக பணிபுரிந்து வந்தார். மேற்படி நம்பிக்கைகளை பயன்படுத்தி நானும், என் தந்தையும் 1ம் பிரதிவாதி நிறுவனத்தில்

தொகைகளை பெற்று வந்தோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி நிறுவனத்தின் உள் தணிக்கையாளர்கள் சல்பியூரிக் ஆசிட் கொள்முதல் சம்மந்தமாக விசாரணை நடத்தி அதன் பேரில் என் தந்தை செய்து வந்த ஏமாற்றி பணம் பறித்த விவரம் தெரியவந்தது என்றால் சரியல்ல, 1ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு சல்பியூரிக் ஆசிட்–ஐ விற்பனை செய்யவே இல்லை. மேற்படி விவரங்களை மறுத்து நான் கூடுதல் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தந்தை என்னுடைய சப்ளேயரிடம் ரூபாய் 125 க்கு வாங்கி ரூபாய் 279 க்கு 1ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு விற்றுவிட்டார் என்ற விவரம் அந்த விசாரணையில் தெரியவந்தது என்றால் சரியல்ல. அதன்பிறகு விசாரணை நடத்தி நானும், என் தந்தையும் ரூபாய் 87,61,837 கையாடல் செய்த விவரம் தெரியவந்தது என்றால் சரியல்ல. ஜெய்தீப் ஏஜென்சிஸ் என்ற நிறுவனம் என்னுடைய சப்ளே நிறுவனங்களில் ஒன்றாகும். பொன்மணி செம் என்ற நிறுவனம் எனது சப்ளே நிறுவனம் என்றால் சரியல்ல. மெழுகு என்ற மூலப்பொருளை வெஜிடபிள் மெழுகு என்ற நிறுவனம் சப்ளே செய்கிறது என்றால் சரியல்ல. என் குடும்பத்திற்கு சொந்தமாக திருத்தங்களில் வீடுகளும், கடைகளும் உள்ளதா என்றால் சரிதான். என் தந்தை தான் மேற்படி கட்டிடங்களுக்காக வாடகைகளை வாங்கி வருகிறார் என்றால் சரியல்ல, என் தாயார் வாங்கி வருகிறார். 1ம்பிரதிவாதி நிறுவனத்தில் மேற்படி கையாடல் வகையில் பெற்ற தொகைகள் மூலம் மேற்படி சொத்துக்களாக மாற்றப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வகைக்கு 1ம் பிரதிவாதி தரப்பில் 15.08.2022ம் தேதி புகார் கொடுக்கப்பட்டு விசாரணைக்கு நாங்கள் ஆஜரானோம். அதன்பிறகு தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. காவல்துறை விசாரணையிலிருந்து தப்பிப்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கை Suit for Accounts ஆக தாக்கல் செய்துவிட்டு அந்த அடிப்படையில் ஆதார ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தற்சமயம் நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள இன்வாய்ஸ் தொகைகளை வசூல் செய்வதற்கு பிராது தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பிராது வடிவமைத்தபடி என்னுடைய

Account Statement – ஐ முழுமையாக தாக்கல் செய்யவேண்டும் என்றும், இன்வாய்ஸ் அடிப்படையில் பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. எங்களுக்கும், 1ம்பிரதிவாதி நிறுவனத்திற்கும் இடையே வர்த்தகரீதியான தாவா இல்லை என்றும், மோசடி கையாடல் தொகை சம்மந்தப்பட்டது என்றால் சரியல்ல. எனவே தான் 1ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கூறியுள்ள கையாடல் குற்றச்சாட்டுகளை பொறுத்து கூடுதல் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனவே மேற்படி விவரங்களை நாங்கள் ஒப்புக்கொண்டதால் தான் கூடுதல் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 3,4 பிரதிவாதிகள் 1ம்பிரதிவாதி நிறுவனத்தின் இயக்குநர் என்ற முறையில் பிராதில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டார்களா என்றால் சரியல்ல, வியாபார நடவடிக்கைகளில் அவர்கள் தொடர்பில் இருந்ததால் அவர்களை தரப்பினர்களாக சேர்த்துள்ளோம். மேற்படி விவரத்தை குறிப்பாக பிராதில் சொல்லவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆணங்களில் 3,4 பிரதிவாதிகள் கையெழுத்து செய்துள்ளார்களா என்றால் இல்லை. தேவையற்ற தரப்பினர்களை சேர்த்துள்ளதால் பிராது தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. வாதி நிறுவனத்தில் Accounts எவ்வாறு பராமரிக்கப்படுகிறது என்ற விவரம் எனக்கு தெரியும். மூலப்பொருட்களை நான் கிரையம் பெற்றுக் கொள்ளும்போது கொள்முதல் இன்வாய்ஸ், அதற்கு பணம்பட்டுவாடா செய்யப்படும் பட்சத்தில் நாள்வழிப் பதிவேட்டில் அதற்கான பதிவு மற்றும் சரக்கு இருப்பு பதிவேடு ஆகியவற்றில் அதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்படும் என்றால் மேற்படி ஆவணங்களில் இன்வாய்ஸ்பில் உள்ளது, நாள்வழிப் பதிவேடு கணினியில் பதிவு செய்யப்பட்ட பதிவுகளும் உள்ளது, சரக்கு இருப்பு பதிவேட்டு ஆவணங்களை தேடிப்பார்க்க வேண்டும். வருடாந்தர கணக்குகளை முடிக்கும்போது ஒவ்வொரு பார்ட்டிகளுக்கும் லெட்ஜரில் பதிவுசெய்யப்படும் என்றால் சரிதான். அந்த லெட்ஜரில் ஒவ்வொரு தரப்பினருக்கும் ஒவ்வொரு பக்கத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்படும் என்றால் சரியல்ல. என்னுடைய நிறுவனத்தில் வியாபார பாக்கி சம்மந்தமான லெட்ஜரானது எழுத்து மூலமாக பராமரிக்கப்பட்டு வருகிறது, கணினி

வழியாக பராமரிக்கப்படவில்லை. அவ்வாறு வருடாந்தர கணக்குகளை தணிக்கையாளரிடம் ஆஜர் செய்யும் போது கணினியில் பராமரிக்கப்படும் லெட்ஜரை பிரிண்ட் எடுத்து கொடுக்கப்படும். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 லெட்ஜர் எழுத்துமூலமாக பராமரிக்கப்பட்ட ஆவணம் ஆகும். அது எனது வசதி கருதி பராமரிக்கப்பட்ட ஆவணத்தின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் உண்மையான லெட்ஜர் ஆவணத்தின் நகலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 இன்வாய்ஸ் தொடர் வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 E–way bill எங்களால் வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 இன்வாய்ஸ் தொடரில் பார்ட்டி கையொப்பம் என்ற இடத்தில் 1ம் பிரதிவாதி தரப்பில் யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல, ஏனென்றால் வேறொரு இடத்தில் கையொப்பம் செய்துள்ளார்கள். அந்த கையெழுத்தில் 1ம் பிரதிவாதி நிறுவனத்தின் அலுவலக முத்திரை இல்லை என்றால் சரிதான், ஆனால் இதுபோன்று முத்திரை இல்லாமல் தான் கையெழுத்து செய்வார்கள் என்று சாட்சி கூறுகிறார். அவ்வாறு இடப்பட்ட கையொப்பங்களுக்கும் 1ம்பிரதிவாதி நிறுவனத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. என் தந்தையின் யோசனையின் பேரில் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி விவரங்களை எதிர்வழக்குரையில் 1ம்பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அவ்வாறு கையொப்பம் செய்த நபர்கள் குறித்து என் தந்தையிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. மேற்படி கையொப்பங்கள் பொருட்களை பெற்றுக்கொண்ட பிறகு போடப்பட்டதாகும். இன்வாய்ஸ் தயார் செய்வதற்கு முன்பாக பார்ட்டியிடம் கையொப்பம் பெறவேண்டும் என்றால் அது வழக்கம் இல்லை. வா.சா.ஆ.2 வரிசையில் 1ம்பிரதிவாதி தரப்பில் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் அது வழக்கம் இல்லை. வா.சா.ஆ.1 தொடர் எங்கள் நிறுவன கணினியில் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். 2 இன்வாய்ஸ் நகல்கள் தயார் செய்யப்பட்டது. E–way bill என்பது அதற்கான போர்டலில் மூலம்

விவரங்கள் பதிவு செய்யப்பட்டு பின்பு பதிவிறக்கம் செய்யப்படும் என்றால் சரிதான். இன்வாய்ஸ் தயார் செய்த பிறகு E–way bill விவரங்கள் feed செய்யப்பட்டு இன்வாய்ஸ் பின்பாக பிரிண்ட் எடுக்கப்படும் என்றால் சரிதான். வா.சா.ஆ 2 E–way bill வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1, 2 மூலம் அனுப்பப்பட்ட பொருட்களை அதில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் மூலம் 1ம்பிரதிவாதி நிறுவனத்திற்கு அனுப்புவோம். மேற்படி வாகனங்களுக்கு நான் வாடகைக்கு கொடுத்த வகைக்கு ஆதாரங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் பாதி இன்வாய்ஸ்களுக்கு தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு 1ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு பொருட்களை அனுப்பவில்லை என்றும், அதனால் தான் வாடகை ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

<u>குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.</u>